# காசா : உலக சமாதானத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டும் அக்கறை!

## ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!


THE HINDU

Assembly will adopt resolution for ceasefire in Gaza: CM


THE NEW INDIAN EXPRESS

THE NEW INDIAN EXPRESS 9 OCT 2025

Resolution condemning Israel attacks in coming Assembly session, says CM

EXPRESS NEWS SERVICE @ Chennai

A resolution will be adopted in the upcoming Assembly session on October 14 condemning Israel's attacks on Gaza, emphasising the need for a ceasefire and demanding the union government to take measures towards this, DMK president and Chief Minister MK Stalin said on Wednesday.

Speaking at an all-party agitation organised by CPM, Stalin strongly condemned Israel's attacks on Gaza and said the resolution would reflect the sentiments of the people of Tamil Nadu. He also expressed hope that all parties would support the resolution cutting across political differences.

He thanked CPM for organising the agitation by bringing together various parties against the attack on Gaza, which "apparently violates the international laws and the principles of the United Nations."

Chief Minister MK Stalin participating in a protest organised by the CPM in Chennai on Wednesday | ASHWIN PRASATH

Those who believe in humanism should not view this as a foreign issue. Global peace and human rights are common to all

MK Stalin, chief minister

women, journalists and UN employees have been killed. About 26,000 children have lost their parents. More than one lakh people have been injured. Most parts of Gaza have been destroyed. However, the Palestinians are continuing their struggle against Israel's aggression, without condemning this?"

Stalin further said, "Israel's genocide against Palestinian people should come to an end. I urge the union government to take swift measures towards this. The union government should exert pressure on Israel and other countries concerned to stop these attacks immediately. It should also work with the UN to ensure peace in Gaza and provide humanitarian aid to the affected people. Those who believe in humanism should not view this as a foreign issue. Global peace and


DECCAN Chronicle

9 OCT 2025

TN house will pass resolution on Israeli aggression in Gaza: Stalin

G. BABU JAYAKUMAR, D. SEKAR | DC CHENNAI, OCT. 8

TN house will pass resolution on Israeli aggression in Gaza: Stalin

FROM PG 1

Israeli forces shot dead 45 persons in June when people were waiting for the truck supplying food items to them in the war zone, which was an inhuman act. It was difficult to ignore such cruelties, he said.

Apart from providing medical facilities and food to the people caught in the disaster, a scheme for the rehabilitation of Palestinians, rebuilding the infrastructure in Gaza and continuation of human aid should be carried out by giving assurances to the people and all prisoners of war should be released, he said.


DT NEXT

IN SOLIDARITY

Assembly to adopt Gaza resolution condemning Israel, says CM Stalin

CHENNAI: Chief Minister and DMK President MK Stalin on Wednesday said that the Tamil Nadu Legislative Assembly would adopt a resolution condemning Israel's ongoing assault on Gaza and urging the Union government to press for an immediate ceasefire through diplomatic channels.

Speaking at an all-party demonstration organised by the Communist Party of India (Marxist) in Chennai, Stalin said during the Assembly session beginning on October 14, the government would table a resolution condemning Israel's attacks and calling for an end to the war.

"This resolution will reflect the sentiments of the people of Tamil Nadu," he said, expressing confidence that all parties, across political lines, would support it.

"The ongoing atrocities against the people of Gaza have crossed every limit of humanity. Those who believe in human values are united

CM Stalin participates in an all-party demonstration against Israel's genocide in Gaza, organised by the CPM at Egmore on Wednesday

"Even starving civilians waiting for food were shot dead. Humanitarian volunteers from 47 countries who tried to deliver food and medicines were arrested. These are grave violations of international law," he said.

Viduthalai Chiruthaigal Katchi president Thol Thirumavalavan welcomed the announcement as a success of the all-party demonstration.

CPM state secretary P Shanmugam said the demonstration was


THE TIMES OF INDIA

THE TIMES OF INDIA 9 OCT 2025

CM to Centre: Help restore peace in Gaza

## தொழில் வளர்ச்சியில் சமூக நீதி! முதல்வர் உரை!.. முதல் பக்கத் தொடர்ச்சி

● 2020-2025 நிதியாண்டுகளில் தமிழ்நாட்டில் இருந்து D.P.I.I.T. தளத்தில் அங்கீகரிக்கப்பட்ட, ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 36 விழுக்காடு கூட்டு வளர்ச்சியை பதிவு செய்திருக்கிறது. இது, தேசிய சராசரியான 11 விழுக்காட்டை விட மூன்று மடங்கு அதிகம்.

● உயர் தொழில்நுட்பத் துறையின் 'பவர் ஹவுஸ்'ஆக சென்னை வளர்ந்து வருகிறது.

2021-2024ஆம் ஆண்டு காலத்தில், சென்னையை மையமாக கொண்ட உயர் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 66 விழுக்காடு ஆண்டு கூட்டு வளர்ச்சியை அடைந்திருக்கிறது. தேசிய அளவில் இது இரண்டாவது இடம்.

இந்த சாதனைப் பட்டியலின் பின்னணியில் நாம் வடிவமைத்து செயல்படுத்தி வருகின்ற பல திட்டங்கள் இருக்கிறது. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மெட்ரோ சிட்டியை தாண்டி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் சென்றடைய வேண்டும் என்று கோல் செட் செய்து நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதன்படி, 11 வட்டார மையங்களை அமைத்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற இளைஞர்களுக்கு புதுயுக தொழில் முனைவு வளர்ச்சியில் பங்கெடுக்கவும், அதன் மூலம் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் அவர்களுடைய பங்களிப்பை வழங்கவும், தேவையான செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. தொடக்க நிலையில் உள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் நிதி உதவி கிடைக்காமல் தங்களுடைய முயற்சியை கைவிடக்கூடாது என்பதற்காக, TANSEED என்ற ஆதார நிதி வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இதிலும், பெண் தொழில் முனைவோர்களுக்கு 50 விழுக்காடு கூடுதல் நிதி வழங்குகிறோம். தமிழ்நாட்டில், அதிகரித்து வருகின்ற ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, இந்த நிதியாண்டில், இந்தத் திட்டத்திற்கு மட்டுமே 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

எந்தத் துறையாக இருந்தாலும், எங்களுக்கு சமூகநீதி முக்கியம் என்று ஏற்கனவே சொல்லியிருந்தேன். அப்படித்தான், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களால் நிர்வகிக்கப்படும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு வழங்கப்பட்டு வருகிறது. முதலீடு வழங்குவதோடு, அந்த நிறுவனங்களுக்குத் தேவையான தொழில் பயிற்சிகளும் துறை வல்லுநர்களால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இதற்காக, 2022-23ஆம் ஆண்டில், 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பதை, 2023-24ஆம் ஆண்டு 50 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

முதலீடுகள் தேவைப்படும் புத்தொழில் நிறுவனங்களையும், முதலீட்டாளர்களையும் இணைக்கும் நோக்கத்தில், TANFUND என்ற முதலீட்டாளர் இணைப்பு தளத்தை சென்ற ஆண்டு தொடங்கி வைத்தேன். இதன் வழியாக, புத்தொழில் நிறுவனங்கள் 129 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிதி திரட்டியிருக்கிறது.

●பெரியார் சமூகநீதி தொழில் வளர் மையம்,

● பெண் தொழில் முனைவோர்களுக்காக 'தொழிலி' பயிற்சிப் பட்டறைகள் நடத்துகின்றோம்.

●கிராமந்தோறும் புத்தொழில் திட்டம் என்று ஊரகப்பகுதிகளிலும் புத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்து வருகிறோம். அதே நேரத்தில், உலகளாவிய தொடர்புகளையும் தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு ஏற்படுத்தி வழங்கி வருகிறோம்.

துபாய், அமெரிக்கா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகளில், தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு இணைப்புகளை ஏற்படுத்தித்தரும்வகையில், பல்வேறு முன்னெடுப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பன்னாட்டு புத்தாக்க நிகழ்வுகளில், தமிழ்நாட்டு நிறுவனங்கள் பங்கேற்க உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

### முக்கியப் பங்கு வகிக்கும் 'ஸ்டார்ட் அப்' தமிழ்நாடு!

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் நடத்துகின்ற நிரல் திருவிழா என்கிற ஹேக்கத்தான்ஸில் 'ஸ்டார்ட் அப்' தமிழ்நாடும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

'நில் – பிராண்ட் செல்' என்ற பெயரில், 250 நிமிட வீடியோ பாடம் மூலமாக பிராண்டுகளை எப்படி உருவாக்குவது என்று பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாகதான், உலகளாவிய நாடுகளின் பங்களிப்புடன், புத்தொழில் நிறுவனங்களுக்கு என்று ஒரு சிறப்பு மாநாட்டை நம்முடைய மாநிலத்திலேயே நடத்தவேண்டும் என்று முடிவு செய்து இந்த மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டு இருக்கிறது.

40க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 250க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பங்கேற்று, இவர்களில் பலர் இந்த மாநாட்டில் நடைபெறும் கருத்தரங்கத்தில் உரையாற்ற இருக்கிறார்கள்.

இங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற கண்காட்சி அரங்கத்தில், 21 நாடுகள் அரங்கு அமைத்திருக்கிறார்கள். நாட்டிலேயே, புத்தொழில் நிறுவனங்களுக்காக, 40 உலக நாடுகளின் பங்களிப்போடு ஒரு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு இருப்பது இதுதான் First Time!

இங்கே, வருகை புரிந்திருக்கின்ற தொழில் முனைவோர்கள் எல்லோரும் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான என்வீடியா, மெட்டா, H.C.L, டெக்கத்லான் உள்ளிட்ட, 15க்கும் மேற்பட்ட கார்ப்பரேட் நிறுவனங்கள் பங்கெடுத்திருக்கிறார்கள். புத்தாக்கம் மற்றும் புத்தொழில் சார்ந்த அரசின் திட்டங்களை செயல்படுத்தும், தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் துறைகள் அனைத்தும் இங்கே இடம்பெற்றிருக்கிறது.

### எல்லோருக்கும் பயனுள்ள மாநாடு!

கேரளா, ஒடிசா, மேகாலயா, ஆந்திரப் பிரதேசம் உள்ளிட்ட 9 மாநில அரசுகளின் புத்தொழில் துறைகளும் பங்கெடுத்திருக்கிறார்கள். முதலீட்டாளர் சந்திப்பு நிகழ்வுகள், கூகுள், ஃபோன்பே, மைக்ரோசாஃப்ட், மெட்டா போன்ற நிறுவனங்களின் தனித்துவமான பயிற்சி வகுப்புகள், மாணாக்கர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தும் அரங்குகள் என்று வடிவமைக்கப்பட்டிருக்கின்ற இந்த மாநாடு, எல்லோருக்கும் பயனுள்ளதாக நிச்சயம் அமையும்.

● பன்னாட்டு புத்தொழில் அமைப்புகள்,

● இந்தியாவில் செயல்படுகின்ற பெரு நிறுவனங்கள்,

● ஒன்றிய அரசின் புத்தொழில் அமைப்புகளுடன் இந்த மாநாட்டில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. குறிப்பாக, ஜெர்மனியைச் சேர்ந்த 'ஆசியா பெர்லின்' அமைப்பு, அமெரிக்காவின் சான்டா கிளாரா பல்கலைக்கழகம், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'லிங்க் இன்னோவேஷன்ஸ்' அமைப்பு மற்றும் கனடா, தென் கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புத்தொழில் அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மூலம், தமிழ்நாட்டு நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் உருவாகும். மேலும், பல திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும். அடுத்த 10 ஆண்டுகளில், ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உகந்த முன்னணி மாநிலமாக தமிழ்நாட்டைக் கட்டமைக்க என்னென்ன செய்யவேண்டும் என்கின்ற கருத்துக்களை உள்ளடக்கிய 'விஷன் 2035' தொலைநோக்கு அறிக்கையோடு முதல்நிலை செயல்திட்ட வரைவை இன்று வெளியிட்டிருக்கிறேன்.

புத்தொழில் சார்ந்த தரவுகளை வெளியிடுவதில், புகழ்பெற்ற அமைப்பான 'ஸ்டார்ட் அப் ஜீனோம்'தான் இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள். மாநிலத்தின் புத்தொழில் சூழல் மேம்பாட்டிற்கான வழிகாட்டி செயல்திட்டங்கள் உள்ளடங்கிய இரண்டாம் தொகுப்பு இன்னும் சில வாரங்களில் வெளியிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, தமிழ்நாட்டின் புத்தொழில் சூழல் குறித்த 'இன்க்42' நிறுவனத்தின் ஆய்வு அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறேன்.

இந்த 4 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் புத்தொழில் மற்றும் புத்தாக்க சூழல் அடைந்திருக்கின்ற வளர்ச்சியை ஆதாரங்களுடன் இந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்த மாநாடு தொழில்முனைவு ஆர்வலர்கள்,

ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், மாணவ - மாணவியர் என்று எல்லோருக்குமானது!

**நிறைவாக, நம்முடைய மாநிலத்தின் புத்தொழில் சூழலை வலுப்படுத்தும் விதமாக ஒரு திட்டத்தினை இந்த மாநாட்டில் அறிவிக்க விரும்புகிறேன்.**

**100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில், "இணை உருவாக்க நிதியம்" தொடங்கப்படும். தமிழ்நாட்டு புத்தொழில் நிறுவனங்களில், முதலீடு செய்யும் துணிகர முதலீட்டு நிறுவனங்களில் அரசு முதலீடு செய்யும். இந்த நிதியம் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தால் நிர்வகிக்கப்படும். இதன் மூலம், தமிழ்நாட்டில் புதிய துணிகர முதலீட்டு நிறுவனங்கள் உருவாகும். மேலும், உலக அளவில் முன்னணியில் இருக்கின்ற முதலீட்டு நிறுவனங்களை தமிழ்நாட்டை நோக்கி ஈர்ப்பதற்கும் வழிவகுக்கும்!**

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, கோவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தமிழ்நாட்டிலேயே அதிக நீளமான 10.10 கிலோ மீட்டர் நீளமுள்ள அவிநாசி சாலை உயர்மட்ட மேம்பாலத்தைத் திறந்து வைக்க இருக்கிறேன். அந்தப் பாலத்திற்கு தந்தை பெரியாருடைய உற்றக் கொள்கை தோழர் இந்தியாவின் எடிசன் என்று அழைக்கப்பட்ட கோவைக்குப் பெருமைச் சேர்த்த ஜி.டி.நாயுடு அவர்கள் பெயரை சூட்டியிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நான் கோவைக்கு வந்தபோது, பல்வேறு தங்க நகை உற்பத்தியாளர் சங்கங்களைச் சார்ந்தவர்களை வைத்து ஒரு கோரிக்கையை என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அதை ஏற்று, குறிச்சி தொழிற்பேட்டையில் மிகப் பெரிய தங்க நகைப் பூங்கா கட்டப்படும் என்று அறிவித்தேன். அதற்கான அடிக்கல்லையும் நான் நாட்டவுள்ளேன்.

அடுத்த மாதம் கோவையில் மிகப் பெரிய பூங்காவாக 175 கோடி ரூபாய் செலவில், செம்மொழிப் பூங்கா திறக்க இருக்கிறோம்.

அடுத்து, கோவையில், மிகப் பெரிய நூலகமாக "பெரியார் உலகம்" விரைவில் திறக்க இருக்கிறோம்.

அதேபோல, கோவையில், மிகப் பெரிய கிரிக்கெட் ஸ்டேடியமும் வர இருக்கிறது.

இப்படி தொழில் நகரமான கோவையின் வளர்ச்சிக்கு துணை நிற்கக்கூடிய, நமது திராவிட மாடல் அரசின் பயணம் திராவிட மாடல் 2.0விலும் தொடரும்! தொடரும்! என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# மீனவர்களையும் - படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, அக். 11 -**

**இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 30 மீனவர்கள், நேற்று முன்தினம் (09.10.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்துத் தமிழக மீனவர்களையும், அவர்களது மீன் பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (09.10.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

### 47 மீனவர்கள் சிறை பிடிப்பு!

அக்கடிதத்தில், நேற்று முன்தினம் (09.10.2025) அதிகாலை, ஐந்து இந்திய மீன்பிடிப் படகுகள் மற்றும் 47 மீனவர்கள் (30 தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் 17 காரைக்கால் மீனவர்கள்) இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறைபிடிக்கப்பட்டவர்களில் தமிழ்நாட்டின் கடலோர கிராமங்களைச் சேர்ந்த 30 மீனவர்களும், நான்கு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளும் அடங்கும் என்று கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கைது சம்பவம் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், கடலோர மாவட்ட மக்களிடையே அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025 ஆம் ஆண்டில், ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மீனவர்கள் கைது செய்யப்பட்ட முதல் நிகழ்வு இதுதான் என தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதுபோன்ற கைது சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறுவது, நமது மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்குவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தங்களது பாரம்பரிய தொழிலைத் தொடர்வதில் உள்ள மன உறுதியையும், நம்பிக்கையையும் வெகுவாக பாதிப்பதாகவும் உள்ளது என வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 09.10.2025 நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 242 மீன்பிடிப் படகுகளும், 74 மீனவர்களும் இலங்கைக் காவலில் உள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### உடனடி நடவடிக்கை எடுத்திடுக!

எனவே, நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தில் உடனடியாகத் தலையிட்டு, சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய அதிகாரிகள் மூலம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதோடு, இது போன்ற கைது சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க உரிய தூதரக முயற்சிகளை மேற்கொள்ளவும், கூட்டுப் பணிக்குழுவை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் முதல்வர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (09.10.2025), தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிலையான இயக்க நடைமுறை குறித்த கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்வில், அரசு உயர் அதிகாரிகள் டாக்டர் க.மணிவாசன், தா.கிறிஸ்துராஜ், திருமதி ச.கவிதா மற்றும் மேலாளர்கள் கலந்துகொண்டனர்.